[8th August 1966

APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 71 at page 13.]

(*a*) Yes.

(*b*) The Government have sanctioned a scheme with four Employment Officers functioning at Madras, Coimbatore, Tiruchirappalli and Madurai to start with for attending to the following items of works :—

(a) arranging training programme for post which require some training;

(b) arranging short courses in general knowledge and interview approach for candidates who have to appear before the Public Service Commission examinations;

(c) employment counselling to Harijan candidates in order to make them apply for second and third group jobs; and

(d) liaisons with private employers so as to enable the Scheduled Caste candidates to get some posts in the private sector.

The Director of Employment and Training has also issued instructions to the four Employment Officers to implement two separate schemes drawn up for.—

(1) Candidates desirous of competing the Madras Public Service Commission examinations of Group II and Group III services; and

(2) Candidates to be sent through Employment Exchanges appearing for interview.

The duration of the special training course will be for three months before the commencement of the competitive examinations, etc., with thirty students at a time who will be trained by the Employment Officers. In this connection, the Government have sanctioned an amount of Rs. 11,250 to meet the expenditure on the following items :—

		RS.
1.	Lodging facilities at Rs. 20 for 30 candidates for 3 months at Madras	1,800
2.	Lodging facilities at Tiruchirappalli at Rs. 15 per candidate for 30 candidates for 3 months	1,350
3.	Boarding charges at Rs. 45 per mensem for 30 students for 3 months in Madras City ..	4,050
4.	Boarding charges at Rs. 35 per mensem per candidate for 30 candidates for 3 months at Tiruchirappalli	3,150

8 th August 1966]

5. Travelling Allowance (to and fro) at Rs. 10 per student and other incidental charges at Rs. 5 per student for 30 students at 2 centres		RS. 900
	Total ..	11,250

In addition to the above mentioned scheme, this Government have also recently approved a scheme for the setting up of a pre-examination Training Centre at Madras City to train up Scheduled Castes and Scheduled Tribes for all-India Service Competitive Examinations (I.A.S., I.P.S., I.F.S. and other Central Services Examinations) to be conducted by the Union Public Service Commission. The Government have sanctioned the opening of the Centre for 60 students with necessary staff and other facilities. The cost involved in the scheme is Rs. 1,97,000 (Recurring Rs. 1,78,000 and Non-recurring Rs. 19,000). The Training Centre will be under the control of the Director of Harijan Welfare.

(அ) ஆம்.

(இ) முதலில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் பணியாற்றும் நான்கு வேலைவாய்ப்பு அதிகாரிகளைக் கொண்டு கீழ்க்கண்ட வேலைகளைக் கவனிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது :—

(அ) சிறிது பயிற்சி தேவைப்படுகிற பதவிகளுக்காகப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

(ஆ) அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளில் கலந்துகொள்பவர்களுக்குப் பொது அறிவில் குறுகிய கால பாட முறைக்கு ஏற்பாடு செய்தலும், பேட்டிக்கான பயிற்சி அளிப்பதும்.

(இ) ஹரிஜன நபர்கள், இரண்டாவது, மூன்றாவது தொகுதி வேலைகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்வது சாத்தியமாக இருக்கும் வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு குறித்த ஆலோசனை வழங்குதல் ;

(ஈ) ஹரிஜன நபர்கள், தனியார் துறையில் சில பதவிகளைப் பெறுவதற்காக, தனியார்துறை தொழிலதிபர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

வேலை வாய்ப்பு—பயிற்சித்துறை நெறியாளர் நான்கு வேலை வாய்ப்பு அதிகாரிகளுக்கு இரு தனிப்பட்ட வேலைத் திட்டங்களை நிறைவேற்றும்படி ஆணையிட்டுள்ளார். கீழ்க்கண்டவர்களுக்கு அத்திட்டங்கள் பொருந்தும் :—

(1) தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம் II, III தொகுதிப் பணிகளுக்காக நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் நபர்கள்.

[8th August 1966

(2) போட்டிக்குச் செல்வதற்காக வேலை தேடித்தரும் நிலையங்கள் மூலமாக அனுப்பப்படும் நபர்கள்.

போட்டித் தேர்வுகள் தொடங்குவதற்கு முன்பு மூன்று மாதங்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். ஒரு தடவையில் 30 மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகாரிகள் பயிற்சி அளிப்பர்.

இவ்வகையில் பின்வரும் இனங்களில் ஏற்படும் செலவுகளுக்காக அரசாங்கம் 11,250 ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது :—

	ரூ.
1 சென்னையில் 30 மாணவர்களுக்கு மாதம் ரூ. 20 செலவில் 3 மாதங்களுக்குத் தங்கும் வசதியளித்தல்.	1,800
2 திருச்சிராப்பள்ளியில் ஒருவருக்கு ரூ. 15 வீதம் 30 மாணவர்களுக்கு 3 மாதங்களுக்கு தங்கும் வசதியளித்தல்	1,350
3 சென்னை நகரில் 30 மாணவர்களுக்கு 3 மாதத்திற்கு மாதம் 45 ரூபாய் வீதம் உணவுச் செலவு	4,050
4 திருச்சிராப்பள்ளியில் 30 மாணவர்களுக்கு 3 மாதங்களுக்கு மாதம் 35 ரூபாய் வீதம் உணவுச் செலவு	3,150
5 இரண்டு நிலையங்களிலும் 30 மாணவர்களுக்கு ரூ. 10 வீதம் (போகவர) பயணப்படியும் ரூ. 5 வீதம் மற்ற இடைநிகழ் செலவுகளும் ..	900
மொத்தம் ..	11,250

மேற்கூறிய திட்டத்தைத்தவிர, மத்திய அரசினர் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்.) அனைத்து இந்தியப் பணிகள் போட்டித் தேர்வுகளுக்கு ஹரிஜன மாணவர்களுக்கும், ஆதிவாசி மாணவர்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக தேர்வுப் பயிற்சி நிலையம் (Pre-examination centre) ஒன்றை சென்னையில் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றிற்கும் அண்மையில் அரசாங்கம் ஏற்பளித்துள்ளது. அந்த நிலையத்தில் 60 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் அவசியமான பணியாளர்களுடனும் மற்ற வசதிகளுடனும் அது நிறுவப்படுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 1,97,000 (தொடர் செலவு ரூ. 1,78,000, தொடராச் செலவு ரூ. 19,000) செலவாகும். இந்தப் பயிற்சி நிலையம் ஹரிஜன நல நெறியாளரின் மேற்பார்வையில் இருக்கும்.